දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832

ලේකම්
செயலாளர்
Secretary } 2784811

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
**Fax**: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ..................................

**අධ්‍යාපන අමාත්‍යාංශය**
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. } ED/01/26/07/01/01

දිනය
திகதி
Date } 2011-06-21

சுற்றுநிருப இல: 2011/ 21

சகல மாகாணக்கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள்

**<u>பாடசாலை வலைப்பின்னல் (Schoolnet) நிகழ்ச்சித்திட்டம்</u>**

பாடசாலை வலைப்பின்னல் என்னும் நிகழ்ச்சித்திட்டமானது மாணவர்கள் பாடசாலையில் இணைய வசதிகளை பெற்றுக்கொள்வதோடு அவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்களை பரவலாக்கும் நோக்குடன் 2006 ம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது தற்பொழுது 2011 ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சினால் இதற்கான நிதி வழங்கப்படுகின்றது.

இதன் மூலம் கல்விச் சமூகம் அடையும் பலாபலன்களை உச்ச நிலைக்கு இட்டுச் செல்லும் நோக்கத்துடன் கல்விஅமைச்சின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவானது உடனடியாக செயற்படும் வண்ணம் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதன் பிரகாரம் மாகாணக் கல்வித்திணைக்களங்களும், வலயக்கல்வித்திணைக்களங்களும் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளன.

1. பாடசாலை வலைப்பின்னல் நிகழ்ச்சித்திட்டத்தின் மாகாணமட்ட செயற்பாடுகளின் பொறுப்புக்களை மாகாண தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப இணைப்பாளரிடம் வழங்கி நடைமுறைப்படுத்தல்.

2. பாடசாலை வலைப்பின்னல் நிகழ்ச்சித்திட்டம் வலய மட்ட செயற்பாடுகளின்; பொறுப்புக்களை வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இணைப்பாளரிடம் வழங்கி நடைமுறைப்படுத்தல்.

மாகாண, வலய அலுவலகங்களில் பாடசாலை வலைப்பின்னல் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வு காணும் முகமாக சேவை வழங்குனரிடம் தொடர்பு கொண்டு தீர்த்துவைத்தல். “Help disk' பொறிமுறை பின்பற்றப்படவேண்டும் சம்பந்தப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் தொடர்புள்ளவர்கட்கும், கல்வி அமைச்சிற்கும் தொடர்புகளை மேறகொள்வதற்காக எப்பொழுதும் செயற்பாட்டில்செயற்படும் நிலையில் இருத்தலை உறுதிசெய்தல் வேண்டும்.

மேலும் இது தொடர்பாக சம்பவத்திரட்டுப் புத்தகம் (Logbook) ஒன்று பேணப்பட்டு சம்பந்தப்பட்ட பாடசாலை அல்லது நிறுவனம் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். யாரால் , யாருக்கு, எத்தேதியில், எந்த நேரத்தில் போன்றவை இவ்விபரத்தில் உள்ளடக்கப்பட்டு பேணப்படவேண்டும். பாடசாலை அதிபர்களாலும் இது பற்றிய சம்பவத்திரட்டு புத்தகம் (logbook) பேணப்பட்டு விபரங்கள் பதிவு செய்யப்பட்டு பழுது ஏற்பட்ட நேரம், திகதி குறிக்கப்பட்டு இது விடயம் சம்பந்தமாக யாருக்கு முறையிடப்பட்டது என்பதனையும் தெளிவாக பதிவிலிடவேண்டும்.

எச். எம். குணசேகர
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள்**

1. மேலதிக செயளாலர்(கல்வித் தரமேம்பாடு) கல்வி அமைச்சு,
2. பிரதம கணக்காளர், கல்வி அமைச்சு
3. கல்விப்பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்ப பிரிவு) கல்வி அமைச்சு
4. சகல மாகாணக் கணக்காளர்கள்
5. கணக்காளர் நாயகம்